# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
கார்த்திகை 5
துல்ஹஜ் 8
ஞாயிறு (20-11-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 47
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


### உலகத் தமிழர்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்

## கலைஞரை விடுதலை செய்யக்கோரி

# தமிழ் ஈழம் கிளர்ந்தெழுகிறது!

## ஞாயிறன்று யாழ்நகர் குலுங்கும்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம், கண்டனக் கூட்டம்!

உலகத்தமிழர்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருப்பவரும், ஈழத்தமிழர்களின் இன்னல் கண்டு குமுறியெழுந்து தமிழகத்தலைநகரில் மாபெரும் கண்டனப் பேரணிநடத்தி இந்திய அரசின் கவனத்தை ஈழப் பிரச்சினையின் பால் ஈர்த்தவரும் தமிழக முன்னாள் முதல்வரும் சட்டப் பேரவை எதிர்க்கட்சி முதல்வரும், திமுகழகத் தலைவருமான கலைஞர் கருணாநிதி அவர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி தமிழ்ஈழம் கிளர்ந்தெழுகிறது.

தமிழ் ஈழத்தலைநகர்களில் ஒன்றான யாழ் நகரில் கலைஞரை விடுதலை செய்யக் கோரும் ஓர் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் கண்டனக் கூட்டமும் இன்று (20-11-77) ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் கண்டனக் கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் மாணவர்களும் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆர்ப்பாட்ட ஊர்வலம் திருநெல்வேலிச் சந்தியில் பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகி பலாலிவீதிவழியாக யாழ்ப்பாணத்தையடைந்து, யாழ்ப்பாணத்தின் முக்கிய வீதிகள் வழியாக பிரதான வீதியை அடைந்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச் செயலகத்தை வந்தடையும். கலைஞரை விடுதலை செய்யக் கோரும் மகஜர் ஒன்றை, ஊர்வலத்தினர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும் எதிர்க்கட்சித்தலைவருமான அமிர்தலிங்கத்திடம் ஒப்படைத்து அதை இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கும்படி கோருவார்கள்.

பின்னர் ஊர்வலம் அங்கிருந்து புறப்பட்டு, பருத்தித்துறை வீதிவழியாக நல்லூர் கல்யாண மண்டபத்தையடையும். அங்கு கண்டனக் கூட்டம் நடைபெறும். கூட்டத்தில் இளைஞர்களும் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் உரையாற்றுவார்கள்.

அண்மையில் லண்டனில் கருணாநிதியை விடுதலை செய்யக்கோரி இந்திய தூதரகத்தின் முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈழத்தமிழர் அமைப்புக்களான லண்டன் ஈழ விடுதலை முன்னணியும் தமிழர்நடவடிக்கைக் குழுவும் கலந்துகொண்டு இந்திய தூதருக்கு மகஜர் சமர்ப்பித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.




லண்டன் இலங்கைத் தூதரகத்தின் உள்ளே இலங்கை வெளிநாட்டமைச்சர் ஹமீத் பத்திரிகையாளர் மாநாடு நடத்திய சமயம் தூதரகத்துக்கு வெளியே ஈழத்தமிழ் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சி இது.

## சென்னை விழாவுக்கு 'சிங்களம் மட்டுமே'

### உள்ளூர் படங்களுக்கு இருட்டடிப்பும் புறக்கணிப்பும்!

### திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பாரபட்சம்!

சென்னையில் நடைபெறவிருக்கும் திரைப்படவிழாவுக்கு இலங்கையில் தயாரிக்கப்பட்ட பன்னிரண்டு திரைப்படங்களை அனுப்பி வைப்பதென்று திரைப்படக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. திரைப்படக் கூட்டுத்தாபனம் தேர்ந்தெடுத்துள்ள இந்தப் பன்னிரண்டு திரைப்படங்களும் சிங்களப்படங்களே ஒரு தமிழ்ப்படம் கூட இதில் இடம்பெறவில்லை. உள்ளூர்த் தமிழ்ப்படங்களுக்கு திரைப்படக் கூட்டுத்தாபனம் செய்துள்ள இந்த இருட்டடிப்பும் புறக்கணிப்பும் கண்டு தமிழ்க் கலைஞர்களும், தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களும் குமுறுகிறார்கள்.

தமிழ் நாட்டுத் தலைநகராம் சென்னையில் அடுத்த மாதம் சர்வதேச திரைப்பட விழா ஒன்று நடைபெறவுள்ளது. இந்த விழாவுக்கு இலங்கையின் சார்பில் 12 சிங்களத் திரைப்படங்களை அனுப்பிவைப்பதென்று அண்மையில் திரைப்படக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது!

இலங்கையில் இதுவரை ஒரு டசினுக்குமேற்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் திரைப்படக் கூட்டுத்தாபனம் சென்னைக்கு அனுப்பவிருக்கும் 12 திரைப்படங்களில் ஒரு தமிழ்ப்படம் கூட இடம் பெறவில்லை. அனைத்தும் சிங்களப்படங்களே.

ஈழத்துத் தமிழ் திரைப்படங்களை புறக்கணித்து ஒதுக்கி இருட்டடிப்பு செய்யும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இந்தப் போக்குக் கண்டு, உள்ளூர்த்தமிழ்க் கலைஞர்களும், கலை அபிமானிகளும், தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்களும் உள்ளம் குமுறுகிறார்கள்.

ஈழத்து தமிழ்த் திரைப்பட வளர்ச்சிக்கு திரைப்படக் கூட்டுத்தாபனம் திரைபோட்டு மறைக்கிறதா? ஈழத்தில் தமிழ்க் கலைஞர்களை ஒதுக்கித்தள்ளுவது தான் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் கொள்கையா? என்று அவர்கள் கேட்கிறார்கள்.

சென்னைக்கு அனுப்பவிருக்கும் 12 திரைப்படங்களில் 2படங்களையாவது தமிழ்ப் படமாக அனுப்பக்கூடாதா? ஏன் இந்தப் பாரபட்சமும் புறக்கணிப்பும்? இந்தக் கடைசி நேரத்திலாவது திரைப்படக் கூட்டுத்தாபனம் தனது தவறைத்திருத்தி, உள்ளூர்த் தமிழ்ப்படங்கள் சிலவற்றை சென்னைத் திரைப்பட விழாவுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுசெய்யுமா? என்று ஈழத்துத் தமிழ்க் கலைஞர்கள், படத் தயாரிப்பாளர்கள் கேட்கிறார்கள்.

## பட்ஜட்டை கூட்டணி எதிர்க்கும்!

யூ. என். பி. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தை எதிர்ப்பதென்று எதிர்க்கட்சியாகிய தமிழர் விடுதலைக்கூட்டணி தீர்மானித்துள்ளது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. வரவுசெலவுத் திட்ட விவாதத்தை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ: அமிர்தலிங்கம் வெள்ளிக்கிழமை (18-11-77) ஆரம்பித்துவைத்தார். விவாதத்தில் நாள்தோறும் இரு கூட்டணி பா. உ.க்கள் உரை நிகழ்த்துவார்கள்.

## தமிழ் ஈழத்தேசத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த. இராமநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளும் ரோகனவிஜயவீராவும், வாசுதேவ நாணயக்காராவும், அதே மூச்சில் தாம் பிரிவினையை எதிர்ப்பதாக கூறுவதன் அர்த்தம் என்ன?

ப: தாங்கள் எப்படி வாழ வேண்டுமென்பதை முடிவு செய்யும் உரிமையை—அதாவது தங்கள் தலைவிதியைத் தாங்களே முடிவு செய்யும் உரிமையை சம்பந்தப்பட்ட மக்களுக்கு அளிப்பதே 'சுயநிர்ணய உரிமை' எனப்படும் தமிழ் மக்களுக்கு இந்த சுயநிர்ணய உரிமைவழங்கப்பட்டால் அவர்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து ஒரே நாடாக வாழ்வதா அல்லது பிரிந்து தனிநாடாக வாழ்வதா என்பதை எவ்விதநிர்ப்பந்தமுமின்றித் தீர்மானிப்பார்கள். தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டு, தனி நாடுகோரிக்கையை எதிர்ப்பதாக அதே மூச்சில் மறுபுறம் கூறுவது ஒரு பெரிய கேலிக் கூத்தாகும். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்கள் இணைந்து ஒரே நாடாக வாழத்தீர்மானித்தால் அதைவரவேற்போம்; இல்லை, பிரிந்துதான் வாழ்வது என்று தமிழ் மக்கள் முடிவு செய்தால் அவர்கள் பிரிந்து வாழ்வதற்கு நாம் தடையாக இருக்கமாட்டோம் என்றுதான் ஓர் உண்மையான சிங்கள மார்க்ஸியவாதி கூறுவான்!

ஃ

இராமலிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: எங்கள் பா. உ. யோகேஸ்வரனைப்பற்றிச் சில'வரிகள் கூறுங்கள் பார்க்கலாம்?

ப: 'தன்னைமறந்தசேவை' என்பதற்கு தமிழில் இன்னோர் சொல் தேவையானால் "யோகேஸ்" என்று சடாரென்று கூறிவிடலாம்; அவரது வீட்டுக்கதவு எப்போதும் திறந்தே கிடக்கிறது—எந்த நேரமும் அவரிடம் உதவிகோரி வரும் மக்களால் அவர் வீடு நிறைந்தே கிடக்கிறது. யார் சென்றாலும் சிறுச்சினக்காது, சுறுசுறுப்புடன் அவர்களுக்கு வேண்டியதைக் கவனிக்கிறார் யோகேஸ். இயக்கத்தில் டாக்டர் நாகநாதன் வகித்த இடத்தை இப்போது 'யோகேஸ்' நிரப்புகிறார்!

த. ரமணீஸ்வரன்,
வேப்பங்குளம்.
வவுனியா.

கே: கடந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியா. உங்கள் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்களா?

ப; நிறைவேற்றிமுடிக்காவிட்டாலும், நிறைவேற்றும் பணியில் தங்களை அவர்கள் முழுமையாக அர்ப்பணிப்பார்கள்—அப்படி அர்ப்பணிக்கத்தவறினால், மக்கள் அடுத்த தேர்தலில் அவர்களுக்குச் சரியான பாடம் புகட்டத்தவறமாட்டார்கள்!

பொ. புஷ்பராசா,
வன்னிவிளாங்குளம்,
மாங்குளம்;

கே: ஏர்பூட்டுவிழா நடந்ததே—அது பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: ஜே.ஆர். அவர்களுக்கு 'விவசாயி' வேடம் ரொம்பப் பிரமாதமாக இருந்தது—வேடமிட்டு நடிப்பதில் நம் அமைச்சர்கள் சிவாஜியையும்விட வல்லவர்கள் என்பது புரிந்தது!

கே: உங்கள் சுதந்திரன் அச்சகத்தை சிங்கள வெறியர்கள் ஒன்றும் செய்யவில்லையா?

ப: அறத்தின் காவலராக விளங்கிய தந்தை செல்வாவின் நிழலாகவும், அவரது உள்ளமாகவும், உயிராகவும் விளங்கும் சுதந்திரனை சிங்களக் காடையர்களால் நெருங்க முடியுமா?

ஃ

இராசமனோகரன்,
உடுவில்.

கே: சுதந்திரன் அச்சகம் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டதா? சுதந்திரன் இனி இங்கேயே நிரந்தரமாக வெளிவருமா?

ப: பாதிவந்துவிட்டது மீதியும் விரைவில் வந்துவிடும். இப்போது சுதந்திரனை அச்சிட்டுத் தந்துகொண்டிருக்கிறார் வஸ்தியன் அசசக உரிமையாளர். யாழ்ப்பாணத்தில் சுதந்திரனை அச்சிட நாம் விரும்பியபோது, துணிவுடன் முன்வந்து சுதந்திரனை தொடர்ந்து அச்சிட்டுத்தந்துகொண்டிருப்பவர் வஸ்தியன்உரிமையாளர். சிறந்த தமிழ்ப்பற்றும், இனப்பற்றும் மிக்க வஸ்தியன் அச்சக உரிமையாளர் போன்றோர் சுதந்திரனுக்குப் பக்கபலமாக இருக்கும்போது, சுதந்திரன் தமிழ்ஈழத்தில் நிரந்தரமாக வெளிவருவதற்கு தடை ஏது?

ஃ

பா. இளங்கோவன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கே: ஈழத்தமிழர் நிலை குறித்து ஐ.நா. சபையில் எடுத்துரைக்க எவரும் இல்லையோ?

ப: இதுவரை எவருமிலர் ஏழுகோடி தமிழ் மாந்தர் உலகெலாமிருந்தும் சொந்த நாடில்லாத காரணத்தினால் ஏற்பட்டுள்ள சோக நிலை இது!

ஃ

கே. இராஜ்மோகன்,
கொழும்பு-12

கே: அரசியலமைப்புத் தெரிவுக் குழுவில் கூட்டணியும் அங்கம் வகிக்க வேண்டுமென்று மூன்று நாட்களாக நீட்டி முழக்கி 'ஈழநாடு'ஆசிரியத் தலையங்கம்எழுதியிருந்ததே—படித்தீர்களா?

ப; அரசாங்கத்தைத் திருப்திப் படுத்துவதற்காகவே அந்தப் பத்திரிகை அப்படி எழுதியிருக்கிறது. ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கு நாமும் உடந்தையாக இருந்து அதில் பங்கேற்பதென்பது வேறு! நமக்கு விருப்பமில்லாத போதிலும், ஒரு சட்டம் நடைமுறைக்கு வரும்போது நமது அன்றாட வாழ்வில் நிர்ப்பந்த நிலையில் அச்சட்டத்தின் கீழ் இயங்குவது என்பது வேறு; 1972ம்

— 6ம் பக்கம் பார்க்க

# தமிழர்களின் இறைமையும் ஆட்சியுரிமையும்!



ஈழத்தமிழ் மக்களின் இதயகீதமான தமிழ்ஈழ விடுதலைக் கோரிக்கைக்கு உலக அரங்கில் பலம் வாய்ந்த—யாராலும் அசைக்க முடியாத—அத்திவாரத்தை இட்டுத்தந்தவர் ஈழத்தமிழினத்தின் இதயத்தில் என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். அமரர் திருச்செல்வம் அவர்களே! தமிழ்ஈழப் பிரிவினையைக் கோரியதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறிமாவோ அரசு தொடர்ந்திருந்த வழக்கில்,நீதிமன்றத்தையே மேடையாக்கி, தமிழ் ஈழவிடுதலைக் கோரிக்கையின் வரலாற்றுப் பின்னணியையும், சர்வதேசச் சட்டப்படி அதிலுள்ள நியாயதகதையும் நாடும் நானிலமும் அறிய எடுத்துரைத்து உலகின் கவனத்தை ஈழத்தமிழர் பிரச்சினை மீது ஈர்த்தவர் அமரர் திருச்செல்வம் அவர்கள். அந்தப் பெருமகனின் 70வது பிறந்த நாள் நவம்பர் 18 ஆகும். அவர் நம்மைவிட்டுப் பிரிந்து நவம்பர் 22ம் நாள் ஓராண்டு பூர்த்தியாகிறது. அவரது நினைவாக அவர் விட்டுச் சென்ற கருத்தையே தமிழ் மக்களுக்கு நினைவூட்டுகிறோம், —ஆர்

"1972ல் அரசியல் அமைப்பைத் தயாரிப்பதில் தமிழ் மக்கள் பங்கு கொள்ளவில்லை. பங்குகொள்ளாததால் இசைவு கொடுக்க வில்லை; ஒப்புதல் வழங்கவில்லை. இலங்கையில வாழ்கின்ற இருநாட்டினங்களுள் ஒன்றான தமிழ் நாட்டினத்தின் இசைவு இன்றிச் சிங்கள நாட்டினம் அந்த அரசியல் அமைப்பைத்தயாரித்தது.

"1972இன் அரசியலமைப்பைத் தமிழ்மக்கள் எதிர்த்தார்கள் வன்மையாக எதிர்த்தார்கள். அரசியலமைப்புப்படிகளை எரித்தார்கள் அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை, எதிர்க்கிறார்கள், என்பதை எடுத்துக்காட்டத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பதவியை மூதறிஞர் செல்வநாயகம் ராஜினாமாச் செய்தார். அரசுக்குச் சவால்விட்டார். தேர்தலில அரசுடன் போட்டியிட்டார் அமோக வெற்றி பெற்றார். தமிழ்மக்களின் எதிர்ப்பை அரசுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டினார்.

"இசைவு வழங்காததால், எதிர்த்தமையால், தமிழ் நாட்டினம் 1972இன் அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. 1972 இன் அரசியலமைப்பின் மூன்றாவது விதிக்கமைய இறைமை இலங்கை மக்களுடையதாயிற்று பிரிட்டிஷாரிடம் இருந்த இறைமை இலங்கை மக்களுடையதாயிற்று.

"1972 இன் அரசியலமைப்பைத்தமிழ் நாட்டினம் ஏற்றுக் கொள்ளாவிடினும் தமிழ் நாட்டினத்தின் இறைமை பிரிட்டிஷாரிடம் இருந்துமீளப்பெறப்பட்டது.

"இஃது ஒரு புதுமையான சூழல், புதுமையான நிகழ்வு—உலகில் வேறெங்கணும் நிகழாத ஒன்று—இலங்கைத்தீவில் வாழ்கின்ற தமிழ நாட்டினத்தின் இறைமை அவர்களுடையதாயுள்ளது. எனினும் அந்த இறைமையைப் பயன்படுத்தும் ஆட்சியுரிமை அவர்களுடையதாகவில்லை. இது புதுமை.

"1972 இன் அரசியலமைப்புக்கு இசைவு கொடுக்காததன் மூலம். சிங்கள நாடடினம் தயாரித்த அரசியலமைப்பை எதிர்த்து ஏற்றுக்கொள்ளாததன் மூலம் தமிழ் நாட்டினத்தின் ஆட்சியுரிமை சிங்கள நாட்டினத்திடம் தாரை வார்த்துக் கொடுக்கப்படவில்லை; இது புதுமை.

"1619 ஜூனில் சங்கிலிமன்னனிடம் இருந்து போர்த்துக்கேயரிடம் தமிழ்நாட்டினத்தின் இறைமை சென்றடைந்தது. 1972 மே 22ம் ஆம் நாள் மூதறிஞர் செல்வநாயகத்தின் தலைமையில் தமிழ்ஈழ நாட்டினத்தின் இறைமை தமிழ்ஈழ மக்களிடம் வந்தடைந்தது.

"கடைசித் தமிழ்ஈழ மன்னன் பயன்படுத்திய வீரவாள், வீரமாகாளி அம்மன் கோவிலில் இருப்பதாக கூறுகின்றார்கள். மன்னராட்சிக் காலமெனின் அந்தவாளை மீண்டும் எடுத்துப்பயன்படுத்துபவன் தமிழ்ஈழ மன்னனாவான். மக்களாட சிக்காலமாதலால், தமிழ் ஈழமகன் ஒவ்வொருவரிடமும் இறைமை மீண்டுள்ளது.

"தமிழ்ஈழ மக்கள் தமக்கென வரலாற்றுப் பெருமைமிக்க வளமான ஒரு மொழியைக் கொண்டுள்ளனர். மொழிசார்ந்த பண்பாட டு வாழ்க்கைமுறை கொண்டுள்ளனர். பிரித்து அறியக்கூடிய பரம்பரை உரிமையுடைய. வரலாற்றுப்பெருமைமிக்க எல்லைகளைக் கொண்ட தனியான நிலப்பகுதியைக் கொண்டுள்ளனர். சால்பும் ஒழுக்கமும், தத்துவார்த்த நோக்கும்,கடுமையான உழைப்பும், பரந்த உளப்பாங்கும், உயர்ந்த அரசியல் நோக்கங்களும் கொண்டுள்ளனர். மனிதசமுதாயத்தின் எந்த நாட்டினத்துக்கும் ஈடுகொடுத்து முன்னேறி, மனிதனின் நாகரீக வளர்ச்சியில் நேரடிப்பங்கு கொள்ளும்ஆற்றலுடையவர்.

"1972 மே 22ம் நாள் தமிழ்ஈழ நாட்டினத்தின் இறைமை தமிழ்ஈழ மக்களை வந்தடைந்தது. இவையெல்லாம் கொண்ட தமிழ்ஈழ நாட்டினம் ஆட்சியுரிமைஇன்றி இருக்கிறது. இறைமை மீளப்பெற்ற தமிழ்ஈழ மக்கள், ஆட்சியுரிமையைப்பெற விழைகின்றார்கள்.

"தமிழ்ஈழக்குடிமகனின் இறைமை மீளப்பட்டுள்ளது இந்த இறைமையைப் பயன்படுத்தித் தமிழரின் உயர்ந்த அரசியல் நோக்கங்களை நிறைவுசெய்து, தமிழ் ஈழத்தமிழர்கட்கும், உலகின் ஏனைய தமிழர்கட்கும், மனிதசமுதாயத்துக்கும், மனிதனின் நாகரீக வளர்ச்சிக்கும் பயன்படக்கூடிய வகையில் ஆட்சி அமையக்கூடிய, ஆட்சியுரிமையைப் பெறுவதும் ஈழத்தில் உள்ள தமிழர் ஒவ்வொருவரின் புனித கடமையாகும்.

"விடுதலை, தன்னுரிமை, இறைமை, தன்னாதிக்கம், ஆட்சியுரிமை என்பன உடைய மக்களாட்சிக் குடியரசை தமிழ்ஈழக் குடியரசை அமைத்து வாழவும், பேணவும், பாதுகாக்கவும் அதனால் தமிழ்மக்களும் உலகமும் நன்மையடைய வாழ்வதற்கும் உறுதி பூணுவோமாக."

—([illegible] என்னும் நூலிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டையிட்டாலும் சகோதரர் அன்றோ?

## அரசியல் மடல்

அன்பு நண்பா,

தமிழகத்தில் அண்மையில் வீசியபயங்கரச் சூருவளி—அதனால் ஏற்பட்டிருக்கும் பயங்கர இழப்புக்கள் — உயிர்ப்பலிகள்—தமிழ் நாட்டு மக்கள் விடுகின்ற வேதனைப்பெருமூச்சு—இவற்றைப் பற்றி எண்ணுகின்ற போது கண்கள் குளமாகின்றன; உள்ளம் 'ஓ' வென்று அழுகின்றது; ஈழத்து மலையகத்தில் எண்ணற்ற தமிழர்களை 'மண்சரிவு' மூலம் பலி கொண்ட இயற்கை அன்னை, தன் கோர விளையாட்டை தமிழ்நாட்டு மக்கள் மீது திருப்பி விட்டாள்! வெள்ளப் பெருக்கு, புயல், சூருவளி ஆகிய இயற்கையின் பல்வேறு கொடூர விளையாட்டுக் காரணமாக இதுவரை 296 தமிழர்கள் அங்கு பலியானூர்கள் என்பதைக் கேள்வியுறும்போது துயரவெள்ளத்தில் நாம் மூழ்கிப்போகிறோம்!

நண்பா. தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் இயற்கையின் சீற்றத்துக்கு காரணம் என்னவாக இருக்கலாம் என்று எனக்குள்ளே எண்ணிப் பார்த்தேன்; எனக்குப் பழந்தமிழ் நாட்டில் நடைபெற்றதாக சொல்லப்படும் ஒரு சம்பவம் தான் நினைவுக்கு வந்தது. பாண்டிய நாட்டில் ஒரு தடவை பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாம்; வைகை கரையுடைத்துப் பாய்ந்துபாண்டிநாட்டின் தலைநகரை அழித்திட முற்பட்டதாம்; இயற்கையின் இந்தச் சீற்றம் கண்டு வைகைத்தாயின் கோபம் தணிந்திட, அவளுக்குப் பொன்னும் பொருளும் பூவுமிட்டு வணங்கி 'கோபந்தணிந்திட வேண்டுமம்மா, என்று இறைஞ்சினூனும் பாண்டிய மன்னன் அரிமர்த்தனன்; வைகையின் சீற்றம் இதனூல் எல்லாம் தணியவேயில்லை; மேலும் மேலும் அலைக்கரங்களை வீசியபடி மதுரையை அழிக்க முற்பட்டதாம். இதன் பின்னர், வைகைத் தாயின் கோபத்துககு காரணம் என்ன என்பதை அறிந்திட, தன்மந்திரி பிரதானிகளுடன் ஆலோசனை நடத்தினூன் அரிமர்த்தன பாண்டியன்; அப்போது நல்லவர்கள் மனம் வருந்தும்படி நான் ஏதாவது செய்ததுண்டா? அப்படி ஏதாவது நான் செய்திருந்தால் கூறுங்கள்? என்ற கேள்வியை அங்கு எழுப்புகிறுன். ஓர் அமைச்சர் துணிந்து எழுந்து, "ஆமாம் மன்னவா, ஒன்றுமறியா அப்பாவியான மணிவாசகரை— திருவாதவூரரை— நீங்கள் சிறைக்குள் தள்ளியிருக்கிறீர்கள். அவர் அங்குமனம் வருந்தி இறைவனை நோக்கி ஓலமிடுகிருர்; அவரை உடன் விடுதலை செய்து அந்தப்பெரியவரிடம் மன்னிப்புக் கேளுங்கள்—இயற்கையின் சீற்றம் தணியும்—என்று ஆலோசனைகூறுகிருர், பாண்டிய மன்னன் அப்படியே செய்கிருன்— வைகையின் கோபம் தணிகிறது; வெள்ளம் வடிகிறது—அழிவு நீங்குகிறது. இதுபழந்தமிழ் நாட்டில் நடந்ததாக சொல்லப்படுகின்ற ஒரு கதை!

நண்பா, இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலிலே ஏற்பட்டிருக்கின்ற கொந்தளிப்புக்களையும்—பொலிசார் அங்கு மேற்கொண்டிருக்கின்ற அடக்கு முறைகளையும்—ஒரே குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, ஒரே உணர்வில் உருவாகி, ஒரே தலைவனையே தங்கள் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டிருக்கும் திராவிட இயக்கங்களின் அரசியல் தலைவர்கள் ஒருவரையொருவர் சிறைக்குள் தள்ளி—ஒருவரை ஒருவர் பழிவாங்கிடவும் ஒழித்துக் கட்டவும் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளையும் கண்டு பொறுக்க முடியாமற்ருன் இயற்கை அன்னையும் சீறி எழுந்தனளோ என்று நான் கருதுகிறேன்!

"நாமே நமக்குள் மோதி நம்மை அழித்துக் கொண்டாலொழிய நம்மை வேறு யாராலும் அழித்துவிடமுடியாது" என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி தமது தம்பிமார்களுக்கு கூறுவார். இன்றைக்கு திராவிட இயக்கங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் வைரம் பாய்ந்தபகையையும், ஒருவரையொருவர் அழித்துவிடத்துடிப்பதையும் பார்க்கும் போது, அண்ணன் கூறிய மேற்கண்ட மணிவாசகத்தை அனைவருமே மறந்துவிட்டார்கள் என்பது புரிகிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 'மிசா' சட்டத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் பெருந்தலைவர்களையும், அரசியல்வாதிகளையும், தமிழகத்தில் எராளமான திமுக தொண்டர்களையும் கைது செய்து காவலில்வைத்த முன்னுள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்திக்குக் கூட திமுக தலைவர் கலைஞர் கருணுநிதிக்கு எதிராக 'கமிஷன்' போட முடிந்ததே தவிர—கலைஞரை கைது செய்கின்ற துணிவு பிறக்கவில்லை; ஆனூல் அண்ணுவின் தம்பி எம். ஜி. ஆர். ஆட்சியில், அண்ணுவின் தம்பி கருணுநிதியை பொலிசார் கைது செய்து பயங்கர குற்றங்களை அவர் மீது சுமத்தி சிறைக்கொட்டடிக்குள் அடைத்து வைத்திருக்கிறதைப்பார்க்கும்போது — திராவிட இயக்க உணர்வுகளோடு வளர்ந்த எந்தத் தமிழனும் வேதனையும் வெய்துயிர்ப்பும் அடையாமல் இருந்திட முடியாது!

ஒரு வட இந்தியத்தலைவரின் தமிழ் நாட்டு வருகை தமிழகமக்கள் சுட்டுக் கொல்லப்படவும், தமக்குள் முட்டி மோதிக் கொள்ளவும் ஊரும் உலகமும் கைகொட்டிச் சிரித்திட திராவிட இயக்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளவும், அண்ணுவின் தம்பிகள் ஒருவரையொருவர் பழிவாங்கிக் கொள்ளவும் — காரணமாக அமைந்ததே என்பதை எண்ணிப்பார்த்திடும் போது, வெட்கம் நம்மைப் பிடுங்கித் தின்கிறது!

தமிழ் நாட்டுத்தேர்தலில் அண்ணுதிமுக ஆட்சிபீடத்தை கைப்பற்றியபோது—திமுக எதிர்க்கட்சியாக அமர்ந்தபோது—தமிழ் நாட்டு அரசியலில் இனி வட இந்தியக்கட்சிகளுக்கு இடமேயில்லை; அண்ணுவைச் சுற்றியே —திராவிட இயக்கங்களிடமே—தமிழ் நாட்டு அரசியல் இனி எப்போதும் பத்திரமாக இருந்திடும்; அண்ணுவும் பெரியாரும் தன்மான இயக்க வீரர்களும் போட்ட இறுக்கமான அத்திவாரம் இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் அசையாது என்று உள்ளம் பூரித்தோம்—ஆனூல் ஒரு வடஇந்தியத் தலைவியின் வருகை—தமிழ்நாட்டு திராவிட இயக்கங்களுக்கிடையே மிக மோசமான பகையையும், பழிவாங்கும் உணர்வையும் ஏற்படுத்தி தமிழினத்தலைவர் கலைஞர் கருணுநிதியையும் சிறைக்குள் தள்ளி அவர் மீது மிக மோசமான பழிகளையும் சுமத்திட வழிவகுத்ததையும் காணும்போது—உள்ளபடியே ஈழத்தமிழன் ஒவ்வொருவனும் இரத்தக்கண்ணீர்வடிக்கிருன்!

நண்பா, நம்மைப் பொறுத்தவரை—ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை—திராவிடமுன்னேற்றக்கழகத்தினரும் சரி, அண்ணு திராவிட முன்னேற்றக்கழகத்தினரும் சரி நமக்கு நண்பர்களே; ஈழத்தமிழர் பிரச்சினையின் பால் அதிக ஈடுபாடும் ஆர்வமும் காட்டும் நல்ல நண்பர்கள் இரண்டு இயக்கங்களிலுமே இருக்கிருர்கள். நமது பிரச்சினைகளை. மிகவும் தெளிவாகப் புரிந்துகொண்டவரும், நமக்காக நீண்ட நெடுங்காலமாக குரல் கொடுத்து வருபவருமான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே அதிமுகவின் இப்போதைய அவைத்தலைவராக விளங்குகிருர். அதே போல ஈழத்தமிழனுக்கு இன்னல் என்ருல் தோள்தட்டித்துடித்தெழும் கலைஞர் கருணுநிதி திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவராக விளங்குகிருர். இந்த இரு பெருந்தலைவர்களும் ஈழத்தமிழர்களின் இன்னல்கண்டு குமுறியெழும்பும் தலைவர்கள் மட்டுமல்ல—தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தை வேருன்றச் செய்வதற்கு தங்கள் பேச்சையும் மூச்சையும் அர்ப்பணித்த அண்ணுவின் அருமைத் தம்பிகள் என்பதை அனைவருமே ஒப்புக்கொள்வர்.

நண்பா, ஒரே குடும்பமாக இருந்தவர்கள் இன்று இருகுடும்பங்களானுலும்—தொடர்ந்து நமக்கு அவர்கள் நண்பர்களாகவே இருக்கிருர்கள். என்ருலும்—நமது நண்பர்கள் இருவர்க்கிடையே சச்சரவுகள் மோதல்கள் ஏற்படும்போது, நாம் 'நடுநிலைமை' என்று கூறிக்கொண்டு மௌனமாகி மதில்மேல் பூனையாக இருந்திடலாமா? அப்படி இருந்திடுவது உண்மையான நட்புக்கு இலக்கணம் ஆகுமா?

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக் கண் மேற் சென்று இடித்தற் பொருட்டு"

என்பாரே வள்ளுவர்! அந்த அடிப்படையில் திமுக தலைவர் கலைஞர் கருணுநிதி அவர்களையும், மற்றும் திமுக, திக, தலைவர்களையும் அதிமுக ஆட்சி கைது செய்து சிறையில் தள்ளியிருப்பதையும் கருணுநிதி மீது பயங்கரக் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதையும் வன்மையாக கண்டிப்பது நமது கடமையாகும். அதேபோல —இந்திரா எதிர்ப்பு என்ற போர்வையில் எம். ஜி. ஆர். ஆட்சியை கவிழ்த்திட திமுகவினர் முயற்சித்தார்கள் என்று அதிமுக சுமத்தும் குற்றம் உண்மையாக இருந்தால்—அதுவும் கண்டிக்கப்பட வேண்டியதே!

எது எப்படியிருந்த போதிலும் — குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லையென்று பேரறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி கூறுகின்ற அந்தப் பொன்மொழியை அனுசரித்து—தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள்; கலைஞர் கருணுநிதியையும் ஏனைய திமுக தலைவர்களையும் நிபந்தனையின்றி உடனடியாகவிடுதலைசெய்ய வேண்டும். இது ஈழத்தமிழர்களும், உலகத்தமிழர்களும் தமிழ்நாட்டு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு விடுக்கின்ற அன்பு வேண்டுகோளாகும்! உலகத் தமிழர்களின் பாதுகாப்பு அரணுக விளங்குகிற தமிழக திராவிட இயக்கங்கள் தமக்குள் முட்டி மோதி அழிவதை உலகத் தமிழர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி அழிந்து போகின்ற நாளை வடஇந்திய ஹிந்தி ஏகாதிபத்திய வெறியர்களும், ஈழத்து சிங்கள வெறியர்களும் மெத்த ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கிருர்கள் கருணுநிதி சிறைக்குள் தள்ளப்பட்டார் என்ற செய்தியை ஈழத்துச் சிங்கள ஏடுகள் கொட்டை எழுத்துக்களில் மகிழ்ச்சி பொங்க வெளியிட்டுள்ளன! ஆம், தமிழினப் பாதுகாப்பு அரணுக—விடுதலைப் பாசறையாக —இனத்தின் பலமான காவல் கோட்டையாக விளங்கும் திராவிட இயக்கங்கள் அழிந்து போக வேண்டுமென்பதில் தமிழினத்தின் எதிரிகள் மெத்த ஆர்வத்தோடு இருக்கிருர்கள்! உலகெங்கும் நாடிழந்து, மொழியிழந்து அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் தமிழகத்தில் நடப்பவைகளைப்பார்த்து உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கிருர்கள்!

தமிழகத்தில் மீண்டும் அமைதிநிலவவேண்டும்—திராவிட முன்னேற்றக்கழகமும், அண்ணு திராவிடமுன்னேற்றக்கழகமும் தனித்தனிக் குடும்பங்களாக இயங்கினுலும், அண்ணுவழியில் வேற்றுமையில்ஒற்றுமை கண்டு இயங்கிட இரு கழகங்களும் முயற்சிக்க வேண்டும்! தம்முள் சண்டையிட்டாலும் சகோதரர்— அண்ணுவின் தம்பிகள்—என்பதை திராவிட இயக்கத்தோழர்கள் உணரவேண்டும். வடநாட்டு கட்சிகளின்—வடநாட்டுத் தலைவர்களின் மாயைக்குள் சிக்கி, தமக்குள் மோதி, தங்கள் தனித்துவத்தை இழந்துவிடக்கூடாது —பெரியாரும், அண்ணுவும் உருவாக்கித்தந்து விட்டுச் சென்ற இன உணர்வை, தன்மான உணர்வை இழந்துவிடக்கூடாது—உலகத் தமிழர்களின் நம்பிக்கையையும் கௌரவத்தையும் சிதறடித்துவிடக் கூடாது என்பதே ஈழத் தமிழர்களின் வேண்டுகோளாகும்.!

உன் அன்பு தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வரவுசெலவுத் திட்டம்!

சிறிலங்காவின் புதிய அரசாங்கத்தின் நிதியமைச்சர் திரு. ரொனிடீமெல் அவர்கள் தமது முதலாவது வரவு செலவுத்திட்டத்தை தேசிய அரசுப் பேரவையில் இந்த வாரம் சமர்ப்பித்திருக்கிறார். நாட்டுமக்களுக்கு பல கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அளித்து, எதிர்க்கட்சிகளையே இல்லாதொழிக்கும் விதத்தில் மிருகத்தனமான பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிபீடமேறியுள்ள ஐக்கிய தேசியக்கட்சியினர், மக்களின் நாக்கிலே இனிப்புத் தடவும் விதத்தில் தமது வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்க முயற்சித்திருக்கிறார்கள் என்பது அதைமேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது தெரிகிறது.

வேலையற்றோருக்கு மாதாந்தம் ஐம்பது ரூபா அலவன்ஸ் வழங்குவது—அரசாங்க ஊழியர்களுக்கும், தனியார்துறை ஊழியர்களுக்கும் (ஆகக் கூடிய பட்சம் 50 ரூபாவுக்குள் இருக்கக் கூடியதாக) 25 வீதம் சம்பள உயர்வு வழங்குவது—நெல்லின் உத்தரவாத விலையை ஏழு ரூபாவால் அதிகரித்துள்ளது—தொழிலாளருக்கு நிர்வாகத்தில் பங்களிப்பது—என்பன மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கவர்ச்சித்திட்டங்களாகும்!

அதே சமயத்தில் சீனியின் விலை ஒரு இறுத்தல் ஐந்து ரூபாவிலிருந்து மூன்று ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன், பங்கீட்டு முறையில் இறுத்தல் 72 சதவீதம் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு மட்டுமே சீனி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பங்கீட்டு முறையிலிருந்து சீனி நீக்கப்பட்டுவிட்டது; இதன்படி உண்மையில் இறுத்தல் 72 சதத்துக்கு பொதுமக்கள் பங்கீட்டு முறைப்படி இதுவரை தாம் பெற்றுவந்த சீனியை இனிவெளிமார்க்கட்டில் இரண்டு ரூபா இருபத்தெட்டுச்சதம் கூடுதலாகக் கொடுத்து பெற வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய பிரதமர், முன்பு எதிர்க்கட்சித்தலைவராக இருந்தபோது, தாம் ஆட்சிக்கு வரும்பட்சத்தில் ஒரு ரூபாவுக்கோ அல்லது ஒன்றரை ரூபாவுக்கோ, ஒரு றாத்தல் சீனியை வழங்கத் தம்மால் முடியும் என்று கூறியிருக்கிறார்; ஆனால் இன்று பதவிக்கு வந்தபோது. அவரால் முன்பு சொன்னபடி செய்யமுடியவில்லையே!

ஒரு நாட்டிலுமில்லாத முறையில் இலவச அரிசி வழங்கும் முறையை இந்நாட்டில் புகுத்தியது இதே யூ. என். பி. ஆட்சிதான், முந்திய அரசாங்கம் இலவச அரிசி வழங்குவதை ரத்துச்செய்யப்போவதாக ஒரு வதந்தி பரவியபோது—"ஐயகோ, நாம் கொடுத்த இலவச அரிசியால் மக்கள் அரை வயிற்றுக் கஞ்சியையாவது குடித்து உயிர் வாழுகிறார்களே — மாபாவிகள்" என்று ஓலமிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர், இன்று தாமே 300 ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானம் உள்ளவர்களுக்கு இலவச அரிசி கிடையாது என்று அறிவித்ததன்மூலம் தாம் போட்ட முடிச்சை தாமே அவிழ்த்துள்ளனர்.

ஆனால் இலவச அரிசிவழங்குவதை நீக்கியுள்ள அரசாங்கம் மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்கத்தவறிவிட்டது நெல்லின் உத்தரவாதவிலை அதிகரிப்பினால் அரிசியின் விலையும் அதிகரிக்கவே செய்யும். எனவே, அரிசிவிலையும், சீனி விலையும் அதிகரிக்கும்போது அரசு வழங்கும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத சம்பள உயர்வு பொதுமக்களுக்கு எந்த மூலைக்குக் காணும்?

முந்திய அரசாங்கம் பின்பற்றிய கட்டுப்பாடுகள் மிகுந்த பொருளாதாரக் கொள்கையை முற்றாக நிராகரித்துவிட்டு, சுதந்திரமான ஒரு பொருளாதாரக் கொள்கையை நிதியமைச்சர் முன்வைத்திருக்கிறார். 'பீக்ஸ்'திட்டம், மாற்றத்தக்க ரூபாக்கணக்கு, கோட்டாமுறை ஆகியன ரத்துசெய்யப்பட்டுள்ளன; தேவையற்ற இறக்குமதிக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன; மொத்த வியாபார வரிகள் குறைக்கப்படவுள்ளன; என்றெல்லாம் நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

மேற்கண்டதிட்டங்கள் மூலம், நாட்டில் பொருள்தட்டுப்பாடுநீங்கும், மக்களின் கஷ்டங்கள் தீரும்; என்று அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் இவற்றினால் ஏற்படப்போகும் விளைவு என்ன என்பது போகப் போகத்தான் புரியும்!

**இந்த வரவுசெலவுத்திட்டத்தில் தமிழ் ஈழத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் எதற்கும் பணம் ஒதுக்கப்படவில்லை. தமிழ் ஈழத்தை தனது ஏகாதிபத்திய பிடிக்குள் பலவந்தமாக வைத்துக்கொண்டிருக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு, தமிழ் ஈழத்தின் பொருளாதாரத் தேவைகளை அறியவும் நிறைவேற்றவும் ஆற்றலுமில்லை; தகுதியுமில்லை.**

சென்ற 1976ம் ஆண்டு, முந்திய அரசு முன்வைத்த வரவுசெலவுத் திட்ட உரை மீது உரைநிகழ்த்திய கோப்பாய் பா. உ. சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் அன்று கூறியபின்வரும் வாசகங்கள் இன்றைய வரவு செலவுத்திட்டத்துக்கும் பொருந்தும். அவை இதுதான்:

"இலங்கை முழுவதும் ஒரு குடியரசாக இருக்கிறது என்ற அடிப்படையிலே இலங்கை முழுவதற்குமான ஒரு திட்டமாக இந்த வரவுசெலவுத் திட்டம் அமைந்திருக்கிறது. நாங்கள் இந்தப் புதிய குடியரசு அமைப்பை ஏற்கவில்லையென்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே எங்கள் கோணத்திலிருந்து பார்த்தால், ஒரு சிங்கள அரசாங்கம் தமிழ் ஈழத்திற்கும் சேர்த்து அமைக்கின்ற வரவுசெலவுத்திட்டமாகவும் இது அமைகின்றது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்ஈழத்தினுடைய அபிலாஷைகளையும் தமிழ் ஈழத்தினுடைய தேவைகளையும் தமிழ் ஈழத்தினுடைய பொருளாதார நிறைவுகளையும் தமிழ்ஈழத்தினுடைய அபிவிருத்தி வேலைகளையும் திருப்திகரமாக அறிந்து நிறைவேற்றக்கூடிய ஒரு வரவுசெலவுத்திட்டமாக இது அமையவில்லை. ஒரு நாட்டிற்கு ஒரு வரவுசெலவுத்திட்டம் அமையும்போது அதை இன்னோர் நாட்டிற்கும் சேர்த்து அமைப்பது ஏற்கக்கூடிய விடயம் அல்ல என்பதை நாம் இங்கு தெளிவாகச்சொல்லவேண்டும். ஓர் இனம் மற்ற இனத்தை ஆளும் நிலைமையையே இந்த வரவுசெலவுத் திட்டம் எடுத்துக் காட்டுகின்றது."

திரு. கதிரவேற்பிள்ளை சுட்டிக்காட்டிய இந்தக் கொள்கையின் அடிப்படையில் நின்று தமிழர் விடுதலைக்கூட்டணி பா. உ.க்கள் வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் தமது உரைகளை நிகழ்த்துவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

# வரவுசெலவுத் திட்டமும் கூட்டணி பா.உ.களின் கடமையும்

ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் ஒரு தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதை அங்கீகரிக்கிறது.

ஐ. நா. சாசனம் விதிக்கும் வரைவிலக்கணங்கள் அனைத்தையும் கொண்டிருப்பதால் தமிழ்ஈழம் ஒருதேசிய இனத்துக்கு வேண்டப்படும் சகல தகுதிகளையும் பூர்த்தி செய்கிறது.

ஆகவே, கடந்த தேர்தலில் தமிழ் ஈழம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அபரிமிதமாக அளித்த ஆணையை மீண்டும் வலியுறுத்துவதற்கு மனித உரிமைகள் தினத்தை விடப்பொருத்தமான நாள் வேறுகிடையாது.

அதுவும் எதிர்வரும் 1978 ஆம் ஆண்டை இனவொதுக்கலுக்கு எதிரானபோராட்ட ஆண்டாக ஐ. நா, சபையே பிரகடனம் செய்திருக்கும் பொழுது:இச்சந்தர்ப்பத்தை தகுந்தபடி உபயோகித்து தமிழ்ஈழக் கோரிக்கையை உலகின் பொதுப் பிரச்சினையாக ஆக்கவும் முன்வைக்கவும் வேண்டியதே தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலையாய கடமையாகும்.

கடந்தபொதுத்தேர்தலில் தமிழ்ஈழம் அளித்த தீர்ப்பை ஸ்ரீலங்காவின் சிங்கள அரசு ஏற்றுக்கொள்ளாது போலிச் சாட்டுக்களைக் கூறித்தட்டிக் கழிக்குமாகில் தமிழ் ஈழம் தனது சுயநிர்ணய உரிமையை முடிவாகப்பிரயோகிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அப் பிரச்சினை மீது ஒரு பொதுசன வாக்கெடுப்பை அதுவும் ஐ. நா. சபையினர் பார்வையாளர் முகதாவில் நடத்த முன்வருமாறு புதிய அரசுக்கு எதிர்வரும் மனித உரிமைகள்தினத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சவால் விடுக்க வேண்டும்? மேற்படி சவாலை ஏற்று தமிழ் ஈழம் பிரச்சினைமீது சிங்கள பௌத்த அரசு ஒரு பொதுசன வாக்கெடுப்பை ஐ. நா. பார்வையாளர் முகதாவில் நடத்த முன்வருமானால் தமிழர் சிங்களவர் பிரச்சினை சுமுகமாகவும், சமரசமாகவும் தீர்வுபெறும்.

அல்லாவிட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடம் அத்துடன் சேர்ந்து போகாது, தமிழீழம் கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் அளித்த ஆணையைத் தலைமேல் கொண்டு தமிழ் ஈழப் பிரச்சினையை முதலில் உலகப் பொதுப் பிரச்சினையாக்கும் பணியில் அவசியம் இறங்கியே ஆகவேண்டும். இதற்கு போராட்டங்கள் எதிலும் உடனடியாககுதிக்க வேண்டுமென்பதில்லை. போராட்டத்துக்கு முன் முதற்படியாக தமிழ்ஈழக் கோரிக்கையின் நியாயத்தை அனைத்து உலக நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பிரச்சாரத்தை முடுக்கிவிட வேண்டும்.

தேசிய இனத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் உறுதியளித்துள்ள சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்க தமிழ் ஈழத்தில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை அதுவும் ஐ.நா, பார்வையாளர் முகதாவில் நடத்த ஸ்ரீலங்கா அரசை உலகநாடுகளும் சிறப்பாக ஐ.நா.சபையும் வற்புறுத்த வேண்டிய அவசியத்தைவலியுறுத்த பிரச்சாரத்தை எதிர்வரும் 1978ம் ஆண்டு பூராவும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் வெளிநாடுகளில் இயங்கும் அதன் சார்பு இயக்கங்களும்

—8-ம் பக்கம் பார்க்க

## சிங்களம் வாழ்கிறது தமிழ்ஈழம் தேய்கிறது!

தென்னிலங்கையில் லுணுகம் விகார நீர்ப்பாசன திட்டம் ஒன்று யூ. என். பி. ஆட்சியில் உருவாகிறது. இது போன்ற பெரிய திட்டம் தெற்கில் இதற்கு முன்னர் உருவாக்கப்பட்டதில்லையாம்—இந்த நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 42000 ஏக்கர் நிலம் பாசன வசதியை பெறும். 83000 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்படும். 27000 சிங்களவருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

ஆசிய ஆபிவிருத்தி வங்கி இத்திட்டத்துக்கு ரூபா 206, 400, 000 (24 மில்லியன்) ரூபாவை வழங்குகிறது.

ஆனால்—

வீடிழந்து வாசலிழந்து சொத்திழந்து சுகமிழந்து வீதிகளில் விரட்டப்பட்ட அகதிகளில் சுமார் 1000 தமிழ் அகதிகளை வவுனியாப்பகுதியில் குடியமர்த்தி நிலம் வழங்குங்கள்; அந்தக் குடும்பங்களை நாம் பாராமரிக்கிறோம் என்று தானாக முன்வந்தது நோர்வே நாட்டு நிறுவனம் ஒன்று!

அதற்கு, 'முடியாது' என்று பதிலளித்துவிட்டதாம் யூ. என். பி. அரசு!

ஆம், வெளிநாட்டு உதவிகள் அனைத்தும் தெற்கே கொட்டப்படுகின்றன. தமிழ் ஈழத்துக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் தாமாக உதவிட முன்வந்தாலும் அதற்கும் அனுமதியளிக்க மறுக்கிறது சிங்கள அரசு!

புரிகிறதா "தேசிய ஐக்கியத்தின்" பின்னாலுள்ள இனவாதம்!

## சேவை

கிளிநொச்சிப்பகுதியில் பனம்விதை நாட்டி மரம் உண்டாக்க விரும்புபவர்கள் கிளிநொச்சி தேசிய பேரவை உறுப்பினர் திரு: ஆனந்த சங்கரி அவர்களிடம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை யாழ்ப்பாணம் 'மில்க்வைற்' தாபனத்தார் அறியத்தருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் சுயநிர்ணய உரிமை முதலில் அங்கீகரிக்கப்பட வேண்டும்!

## கொழும்புக்கருத்தரங்கில் எதிர்க்கட்சி முதல்வர்பேச்சு

"ஈழத்தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை" என்ற அடிப்படைத்தத்துவம், மாநில சுயாட்சியிலிருந்து பூரண சுதந்திரம் வரை விரிவடையக் கூடியது. இந்தச் சுயநிர்ணய உரிமையை ஈழத்தமிழர்கள் எவ்வாறு பிரயோகிக்கப் போகிறார்கள் என்பது குறித்து திருத்தங்களுக்கும் இதுபற்றி உடன்பாடு காண்பதற்கும் இன்னும் இடம் உண்டு. இதில் முக்கியமானது என்னவென்றால் — தமிழர்களின் சுயநிர்ணய உரிமையும் தமிழினத்தின் தனித்துவமும் முதலில் அங்கீகரிக்கப்பட வேண்டும். இது தான் அடிப்படையானது!



மேற்கண்டவாறு கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் 'தேசியசிறுபான்மை இனமும் சுயநிர்ணய உரிமையும்'' எனும் தலைப்பில் உரையாற்றிய எதிர்க்கட்சி முதல்வரும் கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். வணபிதா. திஸ்ஸ பாலசூரியா தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்குக்கு ஏராளமான சிங்கள பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர். ஆங்கிலத்தில் உரைநிகழ்த்திய திரு.அமிர்தலிங்கம் அவர்கள் மேலும் கூறியதாவது:

"சுயநிர்ணய உரிமை என்பது தனிப்பட்ட ஒருவருக்கு உரிய உரிமையல்ல—அது ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ள உரிமையாகும். இந்த உரிமை ஐ. நா. சபையின் மனித உரிமை சாசனத்தில் இடம் பெற்றிருக்கிறது. இலங்கை வாழ் தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனமாக இருப்பதனால் இந்த சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்குமுற்றிலும் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள்.

'தேசிய இனம்' என்பதற்கு லெனின், ஸ்டாலின் போன்ற அரசியல்மேதைகள் விதித்திருக்கின்றவரை விலக்கணக்கப்படியும் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனமாக இருந்துவருகிறார்கள். தங்களுக்கென ஒரு பொதுமொழியும், கலாசாரமும், பாரம்பரியமும், பொருளாதார அமைப்பும் கொண்டு, வரலாற்று ரீதியாக ஒரு தனித்தேசிய இனமாக தமிழினம் வளர்ந்து வந்திருக்கிறது. அதுமட்டுமன்றி ஒரு தனித்தேசிய இனமாக தொடர்ந்து வாழ்வதற்கும் அவர்கள் தமது ஆசையை வெளிப்படுத்தியுள்ளனர்.

வரலாற்று ரீதியாக இலங்கைத்தீவு இரண்டு தேசிய இனங்களின் தாயகமாகவே விளங்கி வந்திருக்கிறது. இந்த இரண்டு தேசிய இனங்களின் தனித் தனியான தாயகங்களை நிர்வாக வசதிக்காக 1833ம் ஆண்டு வெள்ளைக்கார ஏகாதிபத்தியமே பலவந்தமாக இணைத்து வைத்தது. கோல்புறூக் ஆணைக்குழுவின் பின்பே சிங்களநாடும் தமிழ் ஈழமும் ஒற்றுக்கப்பட்டது. இதன்பின்பே கொழும்பை தலைநகராகக்கொண்டுமுழுப் பொருளாதாரமும் திசை திருப்பப்பட்டது.

இதன் காரணமாகவே தமிழ் ஈழத்தில் அதுவரை வாழ்ந்து வந்த தமிழர்கள், தென்னிலங்கைக்கும், கொழும்புக்கும் வந்து ஆயிரக் கணக்கில் குடியேறத் தொடங்கினார்கள். இப்படியிருந்த போதிலும், கடந்த 20 ஆண்டுகளுக்குள் 1956ம் ஆண்டுஏற்பட்டதாக சொல்படும் "சமூகப் புரட்சியின்" விளைவாக, இருதேசிய இனங்களும் மீண்டும் பிரிந்து தங்கள் தங்கள் சொந்தத் தாயகத்திலேயே வாழும்நிலை ஏற்பட்டுவருகிறது.

"சிறிய நாடுகளைப்பொறுத்தவரை, வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் மாறி இப்போது கறுப்பு ஏகாதிபத்தியமே தலை தூக்கியுள்ளது. சிறிய நாடுகள் தம்மைத் தாமே ஆளவும் அபிவிருத்தி செய்யவும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

"ஏகாதிபத்தியவாதிகள் தமிழ்நாட்டையும் சிங்கள நாட்டையும் பலவந்தமாக இணைத்து வைத்தனர். ஆனால் கடந்த 30ஆண்டுகளாக சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து கண்ட அனுபவத்தின் மூலம் சிறிய இனமான தமிழ் இனத்தை பெரிய இனமான சிங்கள இனம் சுதந்திரமாக சுயமரியாதையுடன் வாழவிடாது என்பதை தமிழர்கள் உணர்ந்து விட்டனர்.

இதன் காரணமாக தம்மைத் தாமே ஆளும் உரிமையைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லையென்ற முடிவுக்கு தமிழினம் வந்துள்ளது."

இவ்வாறு கூறிய திரு. அமிர்தலிங்கம், அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் விளக்கமாகப் பதிலளித்தார்.

## இரசிகமணி மறைந்தார்!



ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் தண்ணொளி வீசிவந்த நமது இலக்கியச் செல்வர்—இரசிகமணி — கனக செந்திநாதன் அவர்கள் திடீரென்று சென்ற புதன் இரவு (16-11-77) சொல்லாமல் கொள்ளாமல் நம்மையெல்லாம் விட்டுப்பிரிந்துவிட்டார் தமிழ் இலக்கிய உலகம் கையறுநிலையில்கலங்கித் துடிக்கிறது.

இலக்கியப்பணியொன்றையே தனது பேச்சாகவும்மூச்சாகவும்கொண்டு தன் கடைசிக்காலத்தில் கால்கள் வழங்காத நிலையிலும் தமிழ்ப்பணியை கைவிடாது ஆற்றிவந்த இரசிகமணி மறைந்து விட்டார். விமரிசனத் துறையில் தனக்கெனத் தனியிடம் வகித்துவந்த இரசிகமணி அவர்கள் சிறந்த சிறுகதை, இலக்கியக் கட்டுரை, நகைச்சுவை, நாடகம் ஆகிய பல்துறைகளிலும் முன்னணி வகுத்தவர். தன் காணியையேவிற்றுநூல்கள் வாங்கியவர் கனக செந்தி.

தனது கடைசிகாலத்திலும் அவர் தனது எழுத்துப்பணியை விடாது 'சுடர்' இதழில் எழுதிவந்தது நேயர்களுக்கு நினைவிருக்கும்.

அவர் மறைவு இலக்கியத்துறைக்கு ஈடிணையற்ற இழப்பு. அவர் மறைவுடன் இலக்கியத் துறையில் ஒருசகாப்தம் முடிவடைந்து விட்டது. இரசிகமணியின் ஆத்மா அமைதியுறுவதாக!

## இரு தேசிய இனக் கோட்பாட்டை நிதியமைச்சரும் ஏற்றார்

இலங்கை ஒரு தீவு; ஆனால் இரண்டு தனித்தனி தேசிய இனங்களின் (Nations) தாயகம் என்ற தத்துவத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்துக் கூறிவருகிறது. தமிழினம் ஒரு தனித்தேசிய இனம் என்பதை அரசாங்கமும், சிங்கள மக்களும் அங்கீகரிக்க வேண்டும் என்று கூட்டணி கோரிவருகிறது. தேசிய அரசுப் பேரவையில் 15-11-77 தமது வரவு செலவுத்திட்ட உரையை நிகழ்த்திய சிறீலங்காவின் நிதியமைச்சர் திரு. றொனிடீமெல். ஒரு கட்டத்தில் இலங்கையில் இருதேசிய இனங்கள் (Two Nations) இருப்பதை வெளிப்படையாக குறிப்பிட்டார்.

"In SriLanka, we not only have two nations — we have two economics" என்ற வார்த்தையை அவர் தமது உரையில் பயன்படுத்தினார்.

## கூட்டணிப் பாசறையில் புதிய சட்டத்தரணி

தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரசாரகர்களில் ஒருவராகவிருந்து தமிழ் ஈழவிடுதலைக்காக, தந்தை செல்வாவின் வழியில் தளபதி அமிர்தலிங்கத்தின் தலைமையில் செயலாற்றி வரும் ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் திரு.எஸ். கே. மகேந்திரன் அண்மையில் இலங்கை உயர்நீதிமன்றச் சட்டத்தரணியாக தமிழில் நீதியரசர்கள் இராசரத்தினம், சர்வானந்தா, வல்பிற்ற ஆகியோர்முன்றலில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.



தனது பதினைந்து ... பொதுவாழ்வில் ... எடுத்துவைத்த இவரது கிம் ... பல பாகங்களிலும் ஒலித்திருக்கிறது. சட்டக்கல்லூரியில் நடைபெற்ற ஆயத்தமின்றிப் பேசும் போட்டியில் முதலிடம் பெற்று சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி தங்கப்பதக்கத்தை வென்றெடுத்த இவர் சட்டக்கல்லூரித் தமிழ்விவாதக்குழுத் தலைவராகவும், இந்துமகா சபையின் இதழாசிரியராகவும் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றியவர். சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் ஆட்சிபீடத்தை தமிழபிமானிகளின் கரங்களில் ஒப்படைக்கும் பெரும்பணியில் பங்குகொண்டோரில் இவரும் ஒருவராவர்.

இவர் சிந்தனைச்சிற்பி சி. கதிரவேலுப்பிள்ளை சட்டத்தரணி ஆர். விசுவநாதன் ஆகியோரிடம் சட்டப் பயிற்சி பெற்று இன்று சட்டத்துறையில் நுழைந்துள்ளார்;

புங்குடுதீவு திரு. சு. கந்தையா திருமதி தங்கம்மா ஆகியோரின் புதல்வரான இவர் ஊரைதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலை, புங்குடுதீவுமகாவித்தியாலயம், வவுனியா மகாவித்தியாலயம், வேலணை மத்தியகல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்,

"நீம் சுகாதார தூபம்"

வேம்பினின்றும் நவீன முறையில் தயாரான "நீம் சுகாதார தூபம்" வீட்டிலுள்ள நுளம்பு பூச்சி, புழு ஆகியவற்றை அற்புதமாக நீக்கி நறுமணம் கமழச் செய்கிறது

ஓர் மில்க்வைற் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரொட்ஸ்கியும்-தனிநாடு போராட்டமும்

"தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை ஆதரிக்கிறோம்; ஆனால் பிரிவினையை எதிர்க்கிறோம்" என்று இளம் ட்ரொட்ஸ்கிய வாதியான வாசுதேவ நாணயக்காரகவும், அவரது கட்சியைச் சேர்ந்த சலாநிதி விக்கிரமபாகு என்பவரும் அண்மையில் தெரிவித்துள்ளனர். ஆனால் இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள ட்ரொட்ஸ்கி அவர்கள் 'தனிநாடு' கோரிக்கையை ஆதரித்ததை இக்கட்டுரையில் எடுத்து விளககுகிறார் கலாநிதி இராஜ. இராஜேந்திரன்.

**கலாநிதி இராஜ. இராஜேந்திரன்**

(நியூயோர்க் — அமெரிக்கா)

லியொன் ட்ரொட்ஸ்கி "நிரந்தர புரட்சி" (Permanent revolution) பற்றி எழுதியதால் இக் கொள்கையே "ட்ரொஷ்கிய"த்தின் அடிப்படை என வர்ணிக்கப்படுகிறது. இந் நிரந்தரப் புரட்சி என்பது ஒரு சமுதாயம் சர்வதேச பொதுவுடமைவாதத்தை நோக்கி முன்னேறும்போது பல்வேறு கட்டங்களையும் கட்டாயம் தாண்டியே போகவேண்டுமென்பதில்லை எனக் கூறுகிறது உதாரணமாக. நிலப்பிரபுத்துவ அமைப்புள்ள ஒரு சமுதாயம் கட்டாயம் முதலாளித்துவ அமைப்பைப் பெற்ற பின்னரே சோசலிசப் புரட்சியை எதிர்நோக்கவேண்டுமென்பதில்லை. நிலப்பிரபுத்துவ அமைப்புள்ள ஒரு சமுதாயத்தில் கூட சோசலிசப் புரட்சி ஏற்படமுடியும். இதுதான் "நிரந்தர புரட்சி"யின் அடிப்படைக் கோட்பாடு.

பல ட்ரொட்ஸ்கிய வாதிகள் "நிரந்தர புரட்சி"யைப் பற்றி மாத்திரம் படித்துவிட்டு இக்கொள்கையைக் கூடிச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் ஒரு சமுதாயம் பல்வேறு கட்டங்களைத் தாண்டிச் செல்லாமலே சோசலிசத்தையும் அதன் பின்னர் பொதுவுடமைவாதத்தையும் அடையலாம் என்பதால் தேசிய இனப் பிரச்சினைகளைத் தீர்க்காமலே சோசலிச சமுதாயத்தை நோக்கி முன்னேறலாம் என்று கருதுகிறார்கள். சோசலிசப் புரட்சியின் பின்னர் மற்றையதேசியஇனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் எனக் கூறுகிறார்கள்.

இதன் அடிப்படையில் தான் இலங்கையிலும் ட்ரொட்ஸ்கிய வாதிகள் உட்படப் பல கம்யூனிஸ்டுகள் சோசலிச அமைப்பு வந்தவுடன் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடுமெனவும் கூறுகின்றனர். ஆகவே சோசலிச அமைப்பு வரும் வரையில் அமைதியாக இருக்கும்படியும், தங்களுக்கு உதவும்படியும் வேண்டுகின்றனர். இது தவறு என்பதும் உண்மையான ட்ரொஸ்கிய வாதத்திற்கு முரண்பட்டது என்பதையும் சரியான முறையில் சுட்டிக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ட்ரொட்ஸ்கி "தேசிய பிரச்சனை" பற்றிக்கூறும் போது, "ஒரு தேசிய இனம் தன்னுடைய தேசத்தை ஆழும் நாட்டிலிருந்து பிரிகும் உரிமையைக் கொண்டிருக்கிறது" என்றார். ஒரு தேசிய இனம் பிரிந்துபோக விரும்பினால் அதற்காகப் போராட வேண்டியது மார்க்சிஸ்டுகளின் கடமை என்றும் கூறினார். தேசிய இனம் பிரிந்துபோக விரும்பினால் அவர்கட்கு அந்த அனுமதியை அளித்துவிட்டே பொதுவுடமைச்சமுதாயத்தை நோக்கி முன்னேற வேண்டும் எனக் கூறினார்.

22-4-1939ல் ட்ரொட்ஸ்கி எழுதிய "உக்ரேன் கேள்வி" என்ற கட்டுரையிலும், 30-7-1939ல் "உக்ரேனின் சுதந்திரம்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலும் தேசிய இனங்களின் பிரச்சனை பற்றிய தன்னுடைய கொள்கையை விளககினார். எவ்வாறு தமிழ் ஈழம் (வட, கிழ் மாகாணங்கள்) சிறிலங்காவின் பகுதியாக இருக்கிறதோ அவ்வாறே உக்ரேன் ருசியாவின் ஒரு மாகாணம் ஈழத்தமிழர்களைப்போன்றே உக்ரேன் மக்களும் தேசிய இனத்தவராகவே கருதப்படுகின்றனர். உக்ரேன் மக்கள் தனிநாடு கேட்டுப் போராடியபோதே ட்ரொட்ஸ்கி இவ்விரு கட்டுரைகளையும் எழுதி உக்ரேன் மக்களின் தனிநாட்டுக் கொள்கைக்கு ஆதரவளித்தார்.

உக்ரேன் மக்களின் தனிநாட்டுப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க மறுத்த ருசியர்களை "இனவெறியர்" எனச்சாடிய ட்ரொட்ஸ்கி இரண்டாவது இண்டர்நாஷனலும் இதுபற்றிக் கவனம் செலுத்தாததைக் கண்டித்தார். லெனினின் தேசிய விடுதலைப் போராட்டம், சுயநிர்ணயக் கருத்துக்களை வலியுறுத்தி "இன்றைய நிலையில் உக்ரேன் மக்களுக்கு ஒரேயொரு மார்க்கந்தான் உண்டு—அதாவது ஒற்றுமையான சுயஆதிக்கம் பெற்ற சுதந்திர தொழிலாளர்—விவசாய உக்ரேன் குடியரசு" என்ற குரல் எழுப்பினார்.

ட்ரொட்ஸ்கி 22-4-1939ல் எழுதிய "உக்ரேன் கேள்வி" என்ற கட்டுரையை அமெரிக்காவில் உள்ள சிலர்—மார்க்சிஸ்டுகள் என்று தமக்குத் தாமே பட்டம் சூட்டிக் கொண்ட சிலர்—தாக்கிய போது இவர்களை "சந்தர்ப்ப வாதிகள்" என ட்ரொஸ்கி சாடினார். இந்த சந்தர்ப்ப வாதிகள் உக்ரேன் மக்கள் தங்கள் பிரிவினைப் போராட்டத்தைக் கைவிட்டு ருசியத் தொழிலாளர்களுடன் சேர்ந்து ஸ்டாலினைத் தூக்கியெறிவதில் முனையவேண்டுமெனவும், உலகப்புரட்சி ஒன்றையே மனதில்கொண்டு அனைவரும் செயலாற்ற வேண்டுமெனவும், பிரிவினை பலனளிக்காது எனவும் கூறினர்.

ட்ரொட்ஸ்கி இதற்குப் பதிலளிக்குமுகமாக 30-7-1939ல் ஒரு கட்டுரையை எழுதினார். ருசிய தொழிலாளர்கள் ஸ்டாலினுடைய அதிகார நிர்வாக அரசாங்கத்தை ஒழிக்கப் போராட வேண்டுமென்பதில் தனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது என்று கூறிய ட்ரொட்ஸ்கி ஆனால் இதற்காக உக்ரேன் பிரிவினைப் போராட்டம் குறித்துக் கண்ணை மூடிக்கொண்டு இருக்க முடியாது எனக் குறிப்பிட்டார். உக்ரேன் சுதந்திரம் பெறுவதனால் ருசியாவிலும், உலகத்திலும் உண்மையான தொழிலாளர் புரட்சி ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்குமெனக் கூறினார். "மார்க்சிசத்தைப் பற்றிச் சிறிதளவாவது தெரிந்தவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் குழி தோண்டிப் புதைக்கமாட்டார்கள்" எனக் கூறிய ட்ரொட்ஸ்கி மேலும் குறிப்பிடுகையில் "பல்வேறு இயக்கங்களினது, பிரசாரங்களினதுபோராட்டங்களான முடிவுதான் சர்வதேச தொழிலாளர் புரட்சியாகும். இந்தச் சர்வதேசப் புரட்சி எல்லாப் பிரச்சனைகளுக்கும் முடிவு கட்டுமென்பதில்லை... நேரடியானதும் துணிவானதுமான வழியே உக்ரேனுக்குத் தேவை" என்றார். இந்தத் துணிகர வழி சுதந்திரம் பெற உக்ரேன் மக்கள் போராடும் வழியே என்றார்.

பல்வேறு தேசிய இனங்கள் ஒரு நாட்டு அமைப்பின் கீழ் வாழ்வது அந்தத் தேசிய இனங்களுக்கு நன்மையே அளிக்கும் என்ற பொதுப்படையான வாதத்தை மறுத்த ட்ரொட்ஸ்கி "ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் தனது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் ஒரு நாட்டில் மற்றைய தேசிய இனத்துடன் சேர்ந்து வாழ முடியுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கவேண்டும்" உக்ரேன் தனது சொந்த அனுபவத்தின் விளைவாக "தனிநாடு" என்ற முடிவிற்கு வந்திருக்கிறது ஆகையால் இப்போராட்டத்தை ஆதரிக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

நோர்வே சுவீடனிலிருந்து பிரிந்துசென்ற பின்னர் இரு நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களிடையேயுள்ள நட்புறவுஅதிகரித்ததை லெனின் காட்டிய உதாரணங்களுடன் சுட்டிக்காட்டிய ட்ரொட்ஸ்கிஉக்ரேன் பிரிவினை சர்வதேச புரட்சிக்கு உதவி செய்யுமென மீண்டும் வலியுறுத்தினார். ட்ரொட்ஸ்கியின் தெளிவான கருத்துக்களை வாசிக்க விரும்புவோர் ட்ரொட்ஸ்கிஎழுதிய புத்தக "For a free independent soviet Ukrine" என்ற நூலை அல்லது "Writings of Leon Trotsky என்ற புத்தகத்தை வாசிக்கவும்.

ட்ரொட்ஸ்கி கூறிய இவ்வுண்மைகளைத் தமிழ் ட்ரொட்ஸ்கிய வாதிகள் உணர்ந்துகொண்டு தமிழ்ஈழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும். சிங்கள ட்ரொட்ஸ்கிய வாதிகள் தமிழ்ஈழப் பிரிவினையை வலியுறுத்தி அதன் நியாயத்தையும் அவசியத்தையும் சிங்கள மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

---

## குயுக்தியார்...

—2-ம் பக்கத் தொடர்

ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிறீலங்காவின் அரசியலமைப்பு ஈழத்தமிழ் மக்களின் இணக்கத்தையும் பங்கையும் இறைமையையும் கொணடு உருவாக்கப்பட்டதல்ல: ஆகவே அது தமிழ் மக்களையும், தமிழ் ஈழத்தையும் சர்வதேசநியதிப்படியும் சட்டப்படியும் கட்டுப்படுத்தாது என்பது சட்டமேதை திருச்செல்வம் நமக்கு எடுத்துத்தந்தவலிமைமிகு வாதம் இப்போது நமக்கே சம்பந்தமில்லாத அதே அரசியல் அமைப்புத் தெரிவுக்குழுவில் கூட்டணி பா. உ.க்கள் பங்குபற்றுவது 'ஏகஇலங்கையை' வலியுறுத்தும் மூலச்சட்டத்தையேற்றுக் கொள்வது போல ஆகிவிடும். தெரிவுக் குழுவில் கூட்டணியை பங்குபற்றச் செய்வதன் மூலம் "இலங்கை இரண்டு தேசிய இனங்களைக் கொண்ட இரண்டு நாடுகள்" என்ற கூட்டணியின் இன்றைய அரசியல் சித்தாந்தத்தை முறியடித்து விடலாம் என்று அரசு கணக்குப் போடுகிறது—அதை விளங்கியோ, விளங்காமலோ அதற்கு ஆமாம் போடுகிறது 'ஈழநாடு'.

ஃ

சு. அர்விந்தன்,
தெல்லிப்பளை.

கே: ஐ. தே. க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வகட்சிவட்டமேசை மாநாட்டைக் கூட்டுமா?

ப: அதுபற்றி இப்போது பேச்சுமூச்சு இல்லை; சர்வகட்சிமாநாட்டை ஐ.தே.க. அரசு கூட்டும் என்ற நம்பிக்கையும் இல்லை!

ஃ

கி. அன்ரன் ரஞ்சன்,
12, விஸ்திரினி அவெனியூ,
நீர் கொழும்பு.

கே: கி. பி இரண்டாயிரமாவது ஆண்டில் இலங்கைத் தமிழர்கள் நிலை எப்படி இருக்கும்?

ப: ஒன்றில் தனிநாடு அமைத்து சுதந்திர மக்களாக வாழ்வார்கள் — அல்லது தமிழினம் என்று ஒன்று இந்நாட்டில் இருக்காது!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

---

## சிங்களம் ஏகாதிபத்தியத்தின் சின்னம்...

—7-ம் பக்கத் தொடர்

றின் திருப்புமுனையில் நிற்கிறோம். 1961 தை முதலாம் நாள் பின்வரும் வினு எம்மை எதிர்நோக்குகிறது. "நீங்கள் விடுதலை வீரர்களாக விளங்கப்போகிறீர்களா? அல்லது அடிமைத்தனத்தை ஏற்கப்போகிறீர்களா?" மக்கள் அவர்களை ஆளுவோரதுமொழியிலேயே ஆளப்படுவார்கள் என்பது வரலாற்று உண்மை. என்பதாலேயே நான் இவ்வாறு கூறுகிறேன்.

1961, தை முதலாம் நாள் நாம் சிங்களத்தை ஏற்றுக்கொண்டால் நாம் சிங்கள மக்களை எமது ஆண்டைகளாக ஏற்றுக்கொள்கிறோம் என்று ஆகிவிடும்.

### மொழிச் சிக்கல் அல்ல தன்மானப் பிரச்சினை

சிலர் எம்மைப்பார்த்து வீணுக மொழிப் பிரச்சினை[illegible] யைக் கிளப்புகிறீர்கள். பொருளாதாரத்தில் கனவம் செலுத்துங்கள் என்கிறார்கள். பொருளாதார வளம் நிறைந்தால் மொழிப் பிரச்சினை மறைந்துவிடும் என்கிறார்கள். இது தவறான வாதமாகும். இங்கு எமது கவனத்தைஈர்ப்பதுமொழிச் சிக்கல் அல்ல.

சிங்களத்தையோ, இலத்தீனையோ, கிரேக்கத்தையோ கற்பது பற்றி நான் கவலைப்படவில்லை. இன்றைய சூழ்நிலையில் நான் சிங்களத்தைக் கற்றால் நான் சிங்கள மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். சிங்களவரான ஆண்டைகளுக்கு அடிமைப்படுகிறேன் என்பது பொருளாகும்.

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் வாழ்ந்த தமிழ்ப் பிள்ளைகள் சிங்களத்தைக் கற்றார்கள்; ஆனால், சிங்களம் மட்டும் சட்டத்[illegible] ததது. இன்று தமிழர் எவரும் (பாடசாலைகளில்) சிங்களம் படிப்பதில்லை.

இன்று பாடசாலைகள் அரசுடைமையாகிவிட்டன என்ற காரணத்தினால் தந்திரம் மிக்க வழிகளில் தமிழ் மாணவர் மீது சிங்களத்தைத் திணிக்க முயலவேண்டாம் என நான் கல்வி அமைச்சை எச்சரிக்க விரும்புகிறேன்.

இன்றைய நிலையில் ஒருவன் சிங்கள மக்கள் மீது எவ்வளவுதான் பேரன்பு பூண்டிருந்தபோதிலும் அவன் சிங்களத்தைப் பயின்றால் சிங்கள ஆண்டான்களின் அடிமையாகவே கணிக்கப்படுவான். சிங்களச் சகோதரர்கள்மீது அன்பும் பாசமும் கொண்டிருப்பதன் மூலமே இந்நாட்டின் வளத்தைப் பெருக்கமுடியும் என்பதை எமது கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. எமது கட்சியின் கொள்கைப் பிரகடனத்தின் நான்காவது கூறு இதனையே அடிப்படையாகக் கொண்டது. 'சிங்களச் சகோதரருடன் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் இணக்கத்தையும் வளர்த்தல்' என்பது கட்சியின் நான்காவது தீர்மானம்.

எமது கட்சியின் வாலிபர் முன்னணியும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது. சிங்கள மக்கள் எமது நண்பர்கள் என்பதை நாம் என்றும் ஏற்றுக்கொண்டு கூறிவருகிறோம்,

நாம் சிங்கள மக்கள் மீது பேரன்பு பூண்டுள்ளோம். அதே நேரத்தில் சிங்கள மேலாணையை நாம் அடியோடுவெறுக்கிறோம், இந்த மேலாதிக்கத்தை நாம் உயிருள்ளவரை இறுதி மூச்சுள்ளவரை—ஏற்கமாட்டோம்; எதிர்ப்போம்; எதிர்த்துப் போராடியே தீருவோம்,"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் - ஏகாதிபத்தியத்தின் சின்னம்!

# அதை ஏற்பது நமக்கு தீராத அவமானம்!



மும்மொழித் திட்டம் பற்றி இன்று அனைவரும் பேசுகின்றனர். 1960, மார்கழி 22ம் நாள், நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வைத்திய கலாநிதி அமரர் இ.மு.வி. நாகநாதன் பாராளுமன்ற நிகழ்ச்சிகள் மும்மொழியிலும் நடைபெறவேண்டும் என்றும் பேச்சுக்கள் பேசப்படும் மொழி தவிர்ந்த ஏனைய இரு மொழிகளிலும் சமகால மொழிபெயர்ப்புச் செய்யப்படவேண்டுமென்றும் பாராளுமன்ற உரைகளின் அதிகார அறிக்கையில் (அஞ்சாட்டு) ஒருவரின் பேச்சு அவர் பேசிய மொழியுடன் ஏனைய இரு மொழிகளிலும் அச்சிடப்படவேண்டும் என்றும் முன்மொழிந்தார். எனினும் அம்முன்மொழிவு அன்று நாடாளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. 17 ஆண்டுகளின் பின் அதுவே தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி என்று சிங்களத் தலைவர்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளனர். சிங்கள மக்களினது சிந்தனை நம் தலைவர்களினது சிந்தனையிலும் எந்த அளவுக்குப்பின் தங்கியது, தூரதிருட்டியற்றது என்பதற்கு இது சிறந்த சான்றாகும்.

—அமரர் நாகநாதன் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது.

தமிழ் மொழி சிங்களத்தைவிட மிகவும் வளர்ச்சியடைந்த மொழி என்ற உண்மையை நான் இங்கு வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்... இன்று உலகம் சுருங்கிவிட்டது. அனைத்துலக மொழி ஒன்று ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது அவசியம். எமது கட்சி 'தமிழ் மட்டும்' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. சிங்களத்துக்கும் ஆங்கிலத்துக்கும் ஏனைய மொழிகளுக்கும்கூட நாம் நட்புக்கரம் நீட்டத் தயாராக உள்ளோம்.

பலமொழிகளைக் கற்பது மிகவும் நல்லது. நான் எனது இளமைப் பருவத்தில் இலத்தீன் மொழியைப் பயின்றேன். அதிற் கவிதைகளைக்கூட யாத்துள்ளேன். இன்று நான் அம்மொழியை மறந்துவிட்டேன். கிராமப்பகுதியிலிருந்து ஆங்கிலம் படிக்க நகருக்கு வந்த பல மாணவர்களுடைய நிலையும் இதுவேயாகும், ஆங்கிலத்தைக்

**அமரர் டாக்டர்**
**இ.மு.வி. நாகநாதன்**

கற்றுவிட்டுக் கிராமத்துக்கு மீளும்போது அங்கு ஆங்கிலம் பயன்படுவதில்லை. அவர்கள் தமிழ் பேசுவோரிடையே வாழ்வதால் ஆங்கிலத்தை மறந்துவிடுகின்றனர்.

தமிழ்மக்களுக்கு வேறொரு மொழியைக் (கட்டாயமாகக்) கற்பிக்கமுடியாது என்பதையே இதன்மூலம் நான் விளக்க முயலகிறேன். தமது மொழி, இலக்கியம் என்பவை பற்றிப் பெருமைப்படும ஆண்மைமிக்க மக்களைக்கொண்ட எந்த இனத்தினரையாவது தமது சொந்த மொழியை மறந்துவிட்டு வேறொருமொழியைக்கற்கச் செய்ததற்கு வரலாறு உண்டா? எதிர்க்கட்சித் தலைவரின் (டட்லி) தந்தையே முன்பு ஒருமுறை 'ஒரே மக்கள், ஒரே மொழி, ஒரே ஒரே மதம், ஒரே இனம்' என்று கூறினார். இது சிறுபிள்ளைத்தனமான கருத்தாகும்.

இந்த நாட்டைப் பலப்படுத்திப் பாதுகாக்கவும் மக்களை ஒருமைப்படுத்தவும் உள்ள ஒரே வழி ஒரு மொழியை மட்டும் ஆட்சிமொழியாக்குவதே என்று அவர் (டீ. எஸ்.) அன்று கூறினார்.

## சிங்களத்தை திணிக்கும் முயற்சியில் வெற்றிகாண முடியாது

தமிழ் மிகப் பழமையான மொழி. கிரேக்கம், இலத்தீன், பாளி, சமஸ்கிருதம் முதலியனபோலத் தமிழும் செம்மை சான்ற இலக்கிய வளமுள்ள தொன்மையான மொழியாகும். அம்மொழிகளெல்லாம் இன்று இறந்துபட்டன. எனினும் தமிழ் ஆண்மையோடு வாழும் இலக்கியச் செல்வம் மிக்க பழைய மொழியாக உள்ளது. எந்தப் பெரும்பான்மையும், கொடுங்கோன்மைமிக்க பெரும்பான்மையும், கொடிய அரசியல் யாப்பும் எம்மை அழித்தொழித்து எம்மிடமிருந்து எமது மொழியைப் பறித்துவிடமுடியாது. எம்மிடமிருந்து எதனையும் பறிக்கலாம். ஆனால் எமது மொழியை மட்டும் பறித்துவிடமுடியாது.

## நாடு பிளவுபடும்

சிங்களத்தை எங்கள்மீது திணிக்கும் முயற்சியில் (சிங்களவராகிய) நீங்கள் என்றும் வெற்றிகாணமுடியாது. சிங்களத்தை எம்மீது திணிப்பது நாட்டைப் பிளவுபடுத்திக் குழப்பத்தை ஏற்படுத்தப்போகிறது. எனவே, இவ்வீண் முயற்சியில் ஈடுபடுகிறீர்கள்? இது என்றும் நாட்டை முன்னேற்ற உதவப்போவதில்லை. 'சிங்களம் மட்டும்' என்ற இப்பைத்தியக்காரத்தனத்தைவிட மொழிச் சிக்கலை விடுவிக்க நாகரிகமான, விஞ்ஞான முறையிலான வழி ஒன்றுமில்லையா? எமது (தமிழரது) கருத்தை — எண்ணத்தை — நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

## அடிமைத்தனமா? விடுதலையா!

இன்று (22-12-1960) தமிழர்களாகிய நாம் வரலாற்

—6-ம் பக்கம் பார்க்க

# தனிநாடு கோரிக்கை பற்றி சுவீடன் நாட்டு அமைச்சருக்கு எதிர்க்கட்சி முதல்வர் அளித்த முப்பது நிமிட விளக்கம்

தமிழ்ஈழ விடுதலைக் கோரிக்கை பற்றி உலகறியப் பிரசாரம் செய்திடவும், இந்தக் கோரிக்கைக்கு உலக நாடுகளின் ஆதரவையும் அனுதாபத்தையும், உதவியையும் திரட்டிடவும் தாம் ஏற்றுக்கொண்டுள்ள எதிர்க்கட்சி முதல்வர் பதவியை பயன்படுத்திடுவதில் வாய்ப்புக் கிடைக்கின்ற போதெல்லாம் ஈடுபட்டுவருகிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்நாவலர் அமிர்தலிங்கம். சென்றவாரம் கொழும்பு வந்திருந்த சுவீடன் நாட்டு சர்வதேச கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் திரு. உலா உல்ஸ்டன் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், திரு. அமிர்தலிங்கத்தை சந்தித்தபோது, அவரிடம் ஈழத்தமிழர் நிலை பற்றியும் தமிழ்ஈழக்கோரிக்கைப் பற்றியும் சாங்கோபாங்கமாக திரு. அமிர்தலிங்கம் அவர்கள் விளக்கிக்கூறி, சுவீடன் நாட்டின் ஆதரவையும் அனுதாபத்தையும் கோரினார்:

பிரதமர் ஜே. ஆர். அவர்களுக்கும், எதிர்க்கட்சி முதல்வர் அமிர்தலிங்கத்துக்குமிடையே 'இரகசிய உடன்பாடு' ஏற்பட்டுள்ளதாகவும், இந்த உடன்பாட்டின்படி ஈழத்தமிழர் நிலைகுறித்து வெளிநாட்டு பத்திரிகைகளுக்கும், வெளிநாட்டுப்பிரமுகர்களுக்கும் பேட்டியளிப்பதில்லையென்று திரு. அமிர்தலிங்கம் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் கம்யூனிஸ்ட் ஏடான 'அத்த' அண்மையில் ஒரு சரடுவிட்டிருந்தது. 'அத்த' ஏட்டின் இந்தப் புழுகு எட்டு நாட்களுக்குள் உடைந்தது. தம்மைச்சந்தித்த சுவீடன் நாட்டு அமைச்சரிடம் ஈழத்தமிழர் கோரிக்கை பற்றி திரு. அமிர்தலிங்கம் விஸ்தாரமாக எடுத்துரைத்தார்.

கொழும்பு வந்திருந்த சுவீடன் அமைச்சர், திரு. அமிர்தலிங்கத்தை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வமான அலுவலகத்தில் 11-11-77 வெள்ளிக்கிழமை சந்தித்து பேசினார். திரு. அமிர்தலிங்கம் அவர்களைக் கண்டவுடனேயே சுவீடன் அமைச்சர் கேட்ட முதலாவது கேள்வி, "நீங்கள் ஏன் தனிநாடு கோருகிறீர்கள்?" என்பது தான். இந்தக் கேள்விக்கு மறுமொழியாக திரு. அமிர்தலிங்கம் ஈழத் தமிழரின் சரித்திரம், கடந்த கால்நூற்றாண்டு அரசியல் நிகழ்வுகள், இன்றைய தனி நாடு கோரிக்கை ஆகியவை பற்றி எடுத்துரைத்தார். முப்பது நிமிடநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

திரு. அமிர்தலிங்கம் சுவீடன் அமைச்சரிடம் கூறியதாவது:-

1619ம் ஆண்டு போர்த்துக்கீயரால் போரில் கைப்பற்றப்படும் வரை தமிழர்கள் தனிநாட்டுடன். தனியரசுடனேயே வாழ்ந்திருக்கிறார்கள் அதன் பின் வந்த ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் கூட 1833 வரை தமிழ் ஈழத்தை தனிப்பகுதியாகவே ஆண்டுவந்திருக்கிறார்கள். பின்னர் 1833ம் ஆண்டில்தான், இரு இனங்களின் சம்மதத்தையும் இணக்கத்தையும்பெறாமல் ஆங்கில ஏகாதிபத்தியம் பலவந்தமாக இருதேசங்களையும் தனது நிர்வாக வசதிக்காக ஒன்றாக்கியது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இலங்கைத் தீவின் [illegible] பதற்காக தமிழர்கள் முன்னின்று போராடினார்கள். 1948-ம் ஆண்டு ஆங்கில ஆட்சி அகன்றபின்னர், பெரும்பான்மை சிங்களவர்களின் கைகளுக்கு அதிகாரம் சென்றது. சிங்கள ஆட்சியில் தமிழ்பேசும்மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டன. குடியுரிமை வாக்குரிமை. நிலவுரிமை, மொழியுரிமை கல்வியுரிமை, அனைத்தும் பறிக்கப்பட்டு, 1972ம் ஆண்டின் அரசியலமைப்பின்மூலம் தமிழினம் நிரந்தர அடிமையாக்கப் பட்டுவிட்டது:

கடந்த 25 ஆண்டுகாலமாக ஒரே நாடாக வாழலாம் என்ற நம்பிக்கையுடன் நாம் எமது பகுதிகளுக்கு சுயாட்சி வழங்கும் சமஷ்டி அரசையும் எமது அடிப்படை உரிமைகளையுமே கோரி வந்தோம், குடியரசு அரசியலமைப்பு யாக்கப்பட்டபோது, நாம் அதில் கலந்துகொள்ளாது வெளிநடப்பு செய்தோம். நமது மக்கள் அழிவிலிருந்து மீள்வதற்கு, நமது இறைமையைப் பயன்படுத்தி நமது இழந்த அரசை மீள அமைப்பதே ஒரே வழியென்று தீர்க்கமாக முடிவுசெய்து அதற்காக இன்று போராடி வருகிறோம். ஐ. நா. சபை ஏற்றுறுகொண்டிருக்கும்' தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் நமது விடுதலைக்காக நாம் நடத்துகின்ற இந்த இயக்கத்துக்கு சுவீடன் நாட்டு மக்களின் தார்மீக ஆதரவையும் உதவியையும்கோரி நிற்கிறோம்.'

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் தெரிவித்ததுடன், நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் முன்பு ஒன்றாக இருந்தன—பின்னர் தனித்தனி நாடுகளாகின; அதே போலத்தான் தமிழ்ஈழமும் சிங்கள சிறீலங்காவும் முன்னர் இருவேறு நாடுகளாக இருந்தன; பின்னர் ஏகாதிபத்தியவாதிகளால் பலவந்தமாக ஒன்றிணைக்கப்பட்டன; இப்போது மீண்டும் இந்த ஏகாதிபத்தியப் பிணைப்பை அறுத்து இரு நாடுகளும் தனித்தனி சுதந்திர நாடுகளாக வேண்டும் என்பதே எமது இலட்சியம், இதற்காகவே எமது இயக்கம் பாடுபடுகிறது என்று தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்தவிளக்கத்தை மிகக் கவனமாகக் கேட்ட சுவீடன் அமைச்சர், "எந்த விதத்தில் 'தனிநாடு' இலக்கை அடையப் போகிறீர்கள் என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த திரு. அமிர்தலிங்கம், 'காந்தியடிகள் காட்டிய சாத்வீகப் போராட்ட வழியிலும், சமாதான முறையிலுமே இரத்தம் சிந்தாது எமது இலக்கை அடையவேண்டுமென்பது தான் எமது ஆசை. அதே சமயம் தீவிரப் போராட்டம் மூலம் சுதந்திரஈழத்தை அடையவேண்டுமென்ற கருத்து எமது மக்களிடையே வளர்ந்துவருவதையும் நான் மறைக்க விரும்பவில்லை. இதை எம்மால் தடுக்கமுடியாது" என்றார்.

வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் தமிழ்ப்பகுதி அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுவதில்லையென்பதையும் சுவீடன் அமைச்சருக்கு திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன் டஸ்ரீஸாரின் மற்று மோர் தயாரிப்பு

றேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றேயல் பேக்கிங் பவுடர்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் கோன் பிளவர்
றேயல் பிஸ்மக்ஸ்
றேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்
சிவா இண்டஸ்ட்ரீஸ்
118-1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11


# வரவுசெலவுத் திட்டமும் கூட்டணி....

—4-ம் பக்கத் தொடர்

தீவிரமாக மேற்கொள்ளல் வேண்டும்.

உலக நாடுகளின் தலைநகரங்களில் தமிழ்ஈழக் கோரிக்கையை வலியுறுத்தும் பிரச்சாரங்கள் 1978ம் ஆண்டில் வேகம் பெற வேண்டும். தமிழ்ஈழப்பிரச்சினை பற்றிய இலக்கியங்கள் உலக மொழிகளில் வெளியிடப்படவும் அவை உலகப் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் பந்திகளை நிரப்பவும் பார்த்துக் கொள்ள வேண்டியது சிறப்பாக வெளிநாடுகளில் இயங்கும் தமிழ்ஈழ விடுதலை வீரர்களது கடமையாகும்.

தேசியப் பேரவை உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் தமிழ்ஈழக் கோரிக்கை வலியுறுத்துவதை விடுத்து அதற்குக் குறைந்த வேறு எந்தச் சலுகைகளிலும் அவர்களது கவனம் திசை திருப்பக் கூடாது வரவுசெலவுத்திட்ட விவாதத்திலும் கூட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் யாவரும் ஒரே குரலில் தமிழ் ஈழக்குரலையே ஒலிக்கவேண்டும். ஸ்ரீலங்கா வேறு தமிழ் ஈழம் வேறு தமிழ்ஈழம் ஒரு தனி நாடு என்பதே அமரர் திருச்செல்வம் ட்றயல் அற்பார் நீதிமன்றத்தில் முன் வைத்தவாதம் கோப்பாய் பிரதிநிதி சிந்தனைச் சிற்பி எந்தச் சந்தர்ப்பத்திலும் "தேசிய சிறுபான்மை" என்ற பதத்தை உபயோகிப்பதில்லை. ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும்கோப்பாய் பிரதிநிதியின் உதாரணத்தைப் பின் பற்றி தமிழர் பிரச்சினையைத் தமிழ்ஈழப் பிரச்சினையை வேறுபடப் பிரஸ்தாபியாது இருப்பார்களாக.

கடந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்மக்கள் முன் வைத்த ஒரேபிரச்சினை தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை மீட்க ஆணையிடுங்கள் என்ற ஒரே கோரிக்கையைத்தான் அந்த ஒரேஒரு ஆணையையே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் ஈழம் வழங்கியது ஆகவே வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்காக வாதாடுவதை விடுத்து சிறுபான்மைபெரும்பான்மை என்பதோ அல்லது வேறுவிதமாகவோ தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பேரவை உறுப்பினர்கள் திசை திரும்பவோ, அல்லது படியிறங்கவோ கூடாதென்பதே தமிழ்ஈழத்தினதும் தமிழ் மக்களதும் ஆணையென்பதை இச்சந்தர்ப்பத்தில்;சுதந்திரன் நினைவூட்ட விரும்புகின்றது.

—திரவியம்


2-வது வாரம்

செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

சிவாஜி, ஜெமினி, லக்ஷ்மி, நாகேஷ், சுந்தரராஜன், வீ. கே. ராமசாமி

மற்றும் பலர் நடித்த

உனக்காக நான்

7-வது வாரம்

கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி, கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா, ஸ்ரீபிரியா, எம். ஆர். ராதா, ரவிகுமார், சீர்காழி கோவிந்தராஜன், எம். ஆர். ஆர். வாசு, வீ. எஸ். ராகவன், கோபி கிருஷ்ணா, மேஜர் சுந்தரராஜன் நடித்த

தசாவதாரம்

(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் (மட்டுநகர்) 2வது வாரம்

ஜெயசங்கர் -நடித்த

துணிவே துணை

கிங்ஸ்லி (கொழும்பு)

கமலஹாசன், ரஜனிகாந்த், ஸ்ரீதேவி, விஜயா நடித்த

கே. பாலசந்தரின்

மூன்று முடிச்சு

வெலிங்டன (யாழ்நகர்) 8வது வாரம்

ஜெய்சங்கர்
— நடித்த —

துணிவே துணை

(கலர்)

10-வது வாரம்
கெப்பிடல் (கொழும்பு)

2-வது வாரம்
விஜயா (மட்டுநகர்)

ஜெய்சங்கர், முத்துராமன், பத்மினி நாகேஷ்
—நடித்த—

தேவரின்

பெண் தெய்வம்

6-வது வாரம்

லிடோ (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர்., லதா

— நடித்த —

நீதிக்கு தலை வணங்கு

(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு -12, 194ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்;